# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2350 - 2023 සැප්තැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2023.09.15

*2350 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 262 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


261 - B 082495- 353 (2023/09)

# நானாவித அறிவித்தல்கள்

## கணக்குகளைத் தீர்த்து கலைத்து விடல்

### கொழும்பில் இயங்கும் மேல் மாகாண சிவில் வர்த்தக மேல் நீதிமன்றம்

உடுகம்பளை, வீதியவத்தை,
மினுவாங்கொடை வீதியில்
இல. 28/B/1 இல் நிவிஈரா டிரேடிங் லங்கா (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனி சம்பந்தமான விடயம் குறித்தாவது.

வழக்கு இலக்கம்: CHC/ 47/ 2023/ CO
தன்மை: கணக்குகளை தீர்த்து கலைத்து விடல்
நடைமுறை : சுருக்கம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய கம்பனிச் சட்டத்தின் கீழ்
XII ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றம் மூலம் கலைப்பது சம்பந்தமாக
(கம்பனி பதிவு இலக்கம் PV 77313)

1. உடுகம்பளை, வீதியவத்தை,
மினுவாங்கொடை வீதியில்
இல. 28/B/1 இல் நிவிஈரா டிரேடிங் லங்கா (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனி

முறையீட்டாளர்கள்

சிவில் நீதிமன்ற நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கொழும்பில் செயற்படுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றம் மூலம் மேலே பெயர் குறித்த கம்பனியை கணக்குகளைத் தீர்த்துக் கலைத்து விடுவதன் நிமித்தம் மேலே பெயர் குறித்த கம்பனியாகிய முறையீட்டாளர்களினால் 2023.06.26 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும் அந்த முறைப்பாடு 2023.09.26 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்பதையும் அந்த முறைப்பாடு சம்பந்தமாக நீதிமன்றம் கட்டளை பிறப்பிப்பது சம்பந்தமாக சார்பாகவோ எதிராகவோ கருத்துத் தெரிவிப்பதற்கு எண்ணுகின்ற அந்தக் கம்பனியின் எவரேனும் கடன் கொடுப்பாளர் மற்றும் பிரதிநிதித்துவம் கொண்டவர் தத்தமது கருத்துத் தொடர்பாக அந்த விசாரணை நடைபெறும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறியிலோ பதிவு செய்து கொண்ட சட்டத்தரணி ஒருவர் மூலமாக தோன்றி கருத்துத் தெரிவிக்க முடியுமென்பதையும் முறைப்பாட்டின் பிரதியை குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் குறிப்பிட்ட கடன் கொடுப்பாளரால் மற்றும் பிரதிநிதித்துவம் கொண்டவரால் கீழ் ஒப்பமிடும் சட்டத்தரணியிடம் கேட்கும் பட்சத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் இத்தால் மூலம் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

கையொப்பம் இட்டவர் : சட்டத்தரணி மயோமி ரணவக்க,
41/1, பெல்மன்ட் வீதி, கொழும்பு 12.

**குறிப்பு**: சொல்லப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாக விசாரணையின் போது தெரிபடுவதற்கு எண்ணங்கொண்ட எவரும் அவ்வாறு தெரிபடுவதற்கான கருத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்தரணி மயோமி ரணவக அவர்களுக்கு எழுத்து மூலம் அறியக்கொடுத்தல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அறிவித்தல் கொடுப்பவரின் பெயரும் விலாசமும் கொண்ட தகவல் கொடுக்கப்படுவதோடு அந்த நபரோ கம்பனியாயின் கம்பனியோ அல்லது அந்த நபரின் அல்லது அவர்களின் சட்டத்தரணியோ கையொப்பமிடுவதோடு 2023.09.26 ஆந் திகதிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது தபால் மூலம் அனுப்புவதாயின் போதுமான காலத்துக்குள் மேற்குறிப்பிட்ட பெயர் கொண்ட சட்டத்தரணிக்கு கிடைக்கக்கூடியதாக தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

09- 291

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.